**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6**

**தேசிய வருவாய்வழி மற்றும் திறன் படிப்புதவித் தொகை திட்டத் தேர்வு , ஜனவரி 2026**

**NATIONAL MEANS CUM MERIT SCHOLARSHIP SCHEME EXAMINATION (NMMS)**

**தேர்வு முடிவுகள் – தெரிவுப்பட்டியல்**

**செய்திக் குறிப்பு**

2025–2026–ம் கல்வியாண்டிற்கான தமிழ்நாடு அரசின் அங்கீகாரம் பெற்ற அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் எட்டாம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு தேசிய வருவாய்வழி மற்றும் திறன் படிப்புதவித் தொகை திட்டத் தேர்வு (NMMS) அரசு தேர்வு இயக்ககத்தால் 10.01.2026 (சனிக்கிழமை) அன்று நடத்தப்பெற்றது.

இத்தேர்வின் தேர்வர்கள் பெற்ற மதிப்பெண் விவரங்கள் 18.02.2026 அன்று வெளியிடப்பட்டுள்ளது. மாணாக்கர்களின் பெயர், பிறந்த தேதி, இனம் உள்ளிட்ட திருத்தங்கள் இருப்பின் அதன் விவரங்களை தெரிவிக்க 18.12.2026 முதல் 24.02.2026 வரை கால அவகாசம் வழங்கப்பட்டது. பெறப்பட்ட விவரங்கள் பரிசீலிக்கப்பட்டு திருத்தங்கள் மேற்கொண்டு தற்போது தெரிவுப்பட்டியல் 15.03.2026 இன்று வெளியிடப்படுகிறது. இந்த ஊக்கத் தொகைக்கான தெரிவுப்பட்டியலை www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் Other Examinations ⟶ தேசிய வருவாய்வழி மற்றும் திறன் படிப்புதவித் தொகை திட்டத் தேர்வு முடிவுகள் என்ற பக்கத்தில் காணலாம். இப்பட்டியல் பள்ளிக் கல்வி இயக்ககத்தால் பிற தகுதிகள் சார்ந்த பரிசீலனைக்கு உட்பட்டதாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/–
இயக்குநர்

இடம்: சென்னை
நாள்: 15.03.2026